அசல்

10.12.22. சோமசுந்தர
தேசிகர்.

அசல் -1 நகல் -1

[illegible]

அசல்

✓ 10.12.22. சோமசுந்தர தேசிகர்.

அசல் -1 நகல் -1



நகல்

228



மாயூரம்,
10-12-22.

தங்கள் சோமசுந்தரதேசிகன் அநேக
நமஸ்காரம். உபயக்ஷேமோபரி. நாளை தபாலு
க்குப் புறத்திரட்டுப் பிரதிகள் அனுப்புகிறேன்.
அறத்துப்பாலிலுள்ள புறநானூற்றுச் செய்யு
ள் 11.ம். மாயூரத்திலிருக்கும் பொழுது ஒப்பாட்
டாகிவிட்டது. பொருட்பால் பகுதிகள் அனுப்
பியிருக்கின்றேன். அதனில் முதற் பகுதிப் புத்
தகம் திவான்பஹதூர். பவாநந்தம் பிள்ளையவர்
கள் வசமேயிருக்கிறது. தாங்கள் அவரிடஞ் சொ
ல்லியே கேட்கலாம். அவர் திரும்பக் கொடுக்க
வில்லை. இருந்தாலும் அந்தப் பகுதி வேறு பிரதி
செய்தும் அனுப்பியுள்ளேன். மூன்றும் பகுதி
வெளியிலிருக்கிறதாக நாமவளியில் கண்டேன்.
அவர்களுக்கு எழுதியுள்ளேன். வந்தவுடன்
அனுப்புகிறேன்.

ஏரகத்துந்தாதியதுவே. ஏரகமாலையென்
றென்று 30 செய்யுளில் உண்டோவெனத் தெரி
விக்கக் கூடுமாகில் மிக்க கடப்பாடுடை
யேன். உலாவும் புராணமும் இன்னும்
கைக்கு வரவில்லை. அடுத்த வாரம் அகத்திய
ம் அனுப்ப முயலுவேன். யான் இப்பொழுது
மாயூரம் மேல வீதியில் குடியில்லை. வள்ளலார்
கோயில் கீழ வீதியில் குடியிருக்கிறேன். தமிழ்ப்
பண்டிட். மாயவரம் என்று போட்டால் போது
மானது. மயிலைநாதர் உரை முதலியவைகள் த
பாலுக்கு அதிகச் செலவாகுமானால் ரயில்
பார்சலாக வந்தால் கட்டணம் செலுத்தி எடுத்
துக் கொள்ளுகிறேன் என்பதை வணக்கமாகத்

நகல்

10.12.22. சோமசுந்தர

தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மூவருலாக்கள் அச்சிட முனைவோனை அறிவிக்க வேண்டுகிறேன். ஊர்வசிரத்தினச் சுருக்கம் வேதாந்தத்தோடு சித்தாந்தம் கலந்த பல்சந்தமாலை அதுவும் பாரதிசெய்து பாத்திரட்டோடு வருகிறது. பிரதிஉடையவர்களிடம் திருப்பிவிட்டேன். திருப்புகலூர்ப்புராணமுண்டோ? நிற்க. தங்களுடைய திருமுகத்தின் தலைப்பால் கண்ட வடயத்திற்குப் பெரிதும் வருந்துகின்றேன். வயது கல்வி முதலான எல்லா வாதத்திலும் மேலோங்கிய தாங்கள் அடியேனை யப்படி அழைத்ததற்கு யான் தகுதியில்லாதவன் என்பதை பன்முறையும் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நமஸ்காரம்,

சோமசுந்தரதேசிகன்.

நகல்

40.

copied

சோமசுந்தர தேசிகன்
10-12-22.

த.க. VOL 'A'
p. 310-312.